மெட்ராஸ் உயர் நீதிமன்றம்

முன்னிலை

மாண்புமிகு நீதியரசர் திரு.எஸ்.எம்.சுப்பிரமணியம்

தேதி : 10.01.2023

உரிமையியல் சீராய்வு மனுக்கள் 4 மற்றும் 5/2023

மற்றும்

உரிமையில் பல்வகை மனுக்கள்.36,38,39,47,48 மற்றும் 51/2023

குறுந்தலைப்பு :

வழக்குரை திருப்பல் - வழக்குகளுக்கு இசைவு தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் 1996 ன் பிரிவு 5 தடையாக உள்ளது என்ற காரணம் - எழுவினாக்கள் எல்லா தரப்பினர்களுக்கு வாய்பளிக்கப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் கேட்கப்பட்டு தான் தீர்மானிக்கப்படவேண்டும் - வழக்குரை தாக்கல் செய்யும் பொழுது அது குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்காக திருப்பப்படலாம் - இசைவு தீர்ப்பு ஒப்பந்தம் இருக்கும் பட்சத்தில் இசைவு தீர்ப்பு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 8 விதி விலக்குகளை உருவாக்குகிறது மேலும் இசைவு தீர்ப்பிற்காக தரப்பினர்களை அனுப்ப அதிகாரம் வழங்குகிறது - ஆள்வரை வரம்பு மற்றும் நிலைக்கும் தன்மை ஆகியவை தரப்பினர்களுக்கு வாய்பளிக்கப்பட்டு தான் முடிவு செய்யப்படவேண்டும் - எண்ணிடப்படாத வழக்குரைகளை திருப்பிய உத்தரவுகள் நீக்கரவு செய்யப்படுகின்றன

– ஆவணங்கள் மற்ற வகையில் சரியாக இருப்பின் வழக்குகளை எண்ணிடுவதற்கு உத்தரவுகள் வழங்கப்படுகின்றன.

<u>உரிமையியல் சீராய்வு மனு 4/2023 :</u>

காவியா ஸ்ரீ வஹ்ரி கல்வி அறக்கட்டளைக்காக,

அதன் அறங்காவலர் திரு.சி.ராதாகிருஷ்ணன்,

28, மதார் நகர், கோனேரிக்குப்பம், காஞ்சிபுரம்,

தமிழ்நாடு-631 502, பிரதிநிதித்துவப்படுத்துபவர்,

அதன் அறங்காவலர் திரு.சி.ராதாகிருஷ்ணன்,

த/பெ.சின்னப்பையன். .....மனுதாரர்

எதிர்

1. லைட்ஹவுஸ் லேர்னிங் பிரைவேட் லிமிடெட்,

801, விண்ட்சர், ஆஃப் வித்யானகரி மார்க்,

கலினா, சாண்டாக்ரூஸ் (கிழக்கு), மும்பை-400 098.

2. கங்காரு கிட்ஸ் எஜுகேஷன் லிமிடெட்,

301, மம்தா ஹவுஸ், 231 எஸ்.வி.ரோடு,

பாந்த்ரா (மே), மும்பை-400 050.

3. திருமதி.லினா அஷார், 301, மம்தா ஹவுஸ்,

231, எஸ்.வி.ரோடு, பாந்த்ரா (மே), மும்பை-400 005. .....எதிர்மனுதாரர்கள்

வேண்டுறை: இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227வது ஷரத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட சிவில் சீராய்வு மனு, 2022 ஆம் ஆண்டின் ஓ.எஸ்.எஸ்.ஆர்.எண்.12849-ன் எண்ணற்ற ஓ.எஸ்.எண...../2022ல் கற்றறிந்த முதன்மை சார்பு நீதிபதி காஞ்சிபுரம் - ஆல் 15.12.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டியும், தொடர்ச்சியாக வழக்குரையை கோப்பிற்கு ஏற்று வழக்கை எண்ணிட வேண்டியும்.

<u>உரிமையியல் சீராய்வு மனு 4/2023 :</u>

ரீ வஹ்ரி கல்வி அறக்கட்டளைக்காக, எண்.28,

மதார் நகர், பொன்னேரிக்கரை, காஞ்சிபுரம்,

தமிழ்நாடு-631 503, பிரதிநிதித்துவப்படுத்துபவர்,

திரு.சி.ராதாகிருஷ்ணன், த/பெ.சின்னபையன். .....மனுதாரர்

எதிர்

1. லைட்ஹவுஸ் லேர்னிங் பிரைவேட் லிமிடெட்,

801, விண்ட்சர், ஆஃப் வித்யானகரி மார்க்,

கலினா, சாண்டாக்ரூஸ் (கிழக்கு), மும்பை-400 098.

2. கங்காரு கிட்ஸ் எஜுகேஷன் லிமிடெட்,

301, மம்தா ஹவுஸ், 231 எஸ்.வி.ரோடு,

பாந்த்ரா (மே), மும்பை-400 050.

3. திருமதி.லினா அஷார், 301, மம்தா ஹவுஸ்,

231, எஸ்.வி.ரோடு, பாந்த்ரா (மே), மும்பை-400 005. .....எதிர்மனுதாரர்கள்

வேண்டுறை : இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 227வது ஷரத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்ட சிவில் சீராய்வு மனு, 2022 ஆம் ஆண்டின் ஓ.எஸ்.எஸ்.ஆர்.எண்.680-ன் எண்ணற்ற ஓ.எஸ்.எண...../2022ல் கற்றறிந்த முதன்மை சார்பு நீதிபதி திருத்தணி-ஆல் 21.12.2022 தேதியில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவை ரத்து செய்ய வேண்டியும், தொடர்ச்சியாக வழக்குரையை கோப்பிற்கு ஏற்று வழக்கை எண்ணிட வேண்டியும்.

மனுதாருக்காக : திரு.என்.எல்.ராஜா

மூத்த வழக்கறிஞர்

திரு.அருண் சி.மோகன்

(இரண்டுசீராய்வு மனுக்களிலும்)

<u>பொது உத்தரவு</u>

சீராய்வு மனு சி.ஆர்.பி.எண்.4/2023 ஆனது கற்றறிந்த காஞ்சிபுரம் முதன்மை சார்பு நீதிபதி எண்ணிடாத அசல் வழக்கு எண்...../2022 ன் அசல் வழக்கு பதிவு எண்.12849/2022 ல் கடந்த 15.12.2022 தேதியில் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து அதன் தொடர்ச்சியாக மேற்படி வழக்குரையை பதிவிற்கு எடுத்துக்கொண்டு வழக்கை எண்ணிடுமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

1.1) சீராய்வு மனு சி.ஆர்.பி.எண்.5/2023 ஆனது கற்றறிந்த திருத்தணி முதன்மை சார்பு நீதிபதி எண்ணிடாத அசல் வழக்கு எண்...../2022 ன் அசல் வழக்கு பதிவு எண்.680/2022 ல் கடந்த 21.12.2022 தேதியில் பிறப்பித்த உத்தரவை ரத்து செய்து அதன் தொடர்ச்சியாக மேற்படி வழக்குரையை பதிவிற்கு எடுத்துக்கொண்டு வழக்கை எண்ணிடுமாறு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. சீராய்வு மனுதாரர்/அறக்கட்டளை வாதியாக இருந்து உறுத்துக் கட்டளை வழக்குகளை தாக்கல் செய்தது. முதன்மை சார்பு நீதிமன்றம் காஞ்சிபுரம் மற்றும் முதன்மை சார்பு நீதிமன்றம் திருத்தணி ஆகியவற்றின் முன்பாக முன்னிலைப்படுத்தப்பட்ட வழக்குரைகள் இசைவுத் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் 1996 பிரிவு 5ன் கீழான தடை காரணமாக மேற்படி நீதிமன்றங்களுக்கு மேற்படி வழக்குகளை ஏற்க அதிகார வரம்பு இல்லை என்ற காரணத்தால் திருப்பப்பட்டன.

3. முதன்மை சார்பு நீதிமன்றம் காஞ்சிபுரம் மற்றும் முதன்மை சார்பு நீதிமன்றம் திருத்தணி ஆகியவை இசைவுத் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் 1996ல் குறிப்பிட்டுள்ள பிரிவுகளின் படி எழுவினாக்களை தீர்மானித்துள்ளதாக பிரச்சனைக்குரிய விடயங்களை பரிசீலனை செய்கையில் தெரிகிறது.

4. இசைவுத் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் 1996 ன் பிரிவு 5 ஆனது "அந்த அந்த காலக்கட்டத்தில் அமுலில் இருக்கும் வேறு சட்டங்களில் எவ்விதமாக குறிப்பிடப்பட்டியிருந்தாலும் இந்த பகுதியின் ஆள்வரைக்குட்பட்ட விடயங்களை பொருத்த மட்டில், இந்த பகுதியில் குறிப்பிட்டுள்ளவற்றை தவிர்த்து எந்த நீதித்துறை அதிகாரியும் தலையிடக்கூடாது" என்று விவரிக்கிறது என்பதையே சீராய்வு மனுதாரர்/அறக்கட்டளை சார்பாக முன்னிலையான கற்றறிந்த மூத்த வழக்கறிஞர் முக்கியமாக வாதிட்டார். இருப்பினும், ஒரு இசைவுத் தீர்ப்பு ஒப்பந்தம் இருக்கும் பொழுது இசைவு தீர்ப்பு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவு 8 விதி விலக்குகளை உருவாக்கிறது மேலும் இசைவு தீர்ப்பிற்காக தரப்பினர்களை அனுப்ப அதிகாரம் வழங்குகிறது. இருப்பினும், இசைவு தீர்ப்பு மற்றும் சமரச சட்ட பிரிவுகளை குறித்த இது சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் விரிவாக தீர்மானிக்கப்பட வேண்டியுள்ளது, எனவே, வழக்குரைகள் அதிகார வரம்பு காரணத்திற்காக மட்டுமே திருப்பப்பட முடியாது.

5. வழக்குரை தாக்கல் செய்யும் சமயத்திலேயே திருப்பும் பொழுதுகளில், குறிப்பிட்ட நீதிமன்றம் ஏதேனும் குறைபாடுகள் கண்டறியப்பட்டால் அதைக்குறிப்பிடுவதற்கு தான்

அதிகாரம் உள்ளது என்று இந்நீதிமன்றம் தேர்ந்து கருதுகிறது. ஆனாலும், விசாரணை நீதிமன்றங்கள் மற்றும் மேல் முறையீட்டு நீதிமன்றங்கள் வழக்குரையை கூர்ந்து ஆராயும் போது எழுவினாக்களை தீர்மானிப்பது அனுமதிக்க இயலாதது. எழுவினாக்களை தீர்மானிப்பது வழக்கை எண்ணிட்ட பிறகு நடவடிக்கைகளில் தொடர்புடைய தரப்பினர்களுக்கு உரிய வாய்ப்பளித்த பிறகு மட்டும்தான் செய்யப்பட முடியும்.

6. ஆனபோதிலும், தற்போது இந்த வழக்குகளில், முதன்மை சார்பு நீதிமன்றம் காஞ்சிபுரம் மற்றும் முதன்மை சார்பு நீதிமன்றம் திருத்தணி ஆகியவை ஒரு தீர்ப்புரையை பின்பற்றியதோடு மட்டுமல்லாமல், இசைவு தீர்ப்பு மற்றும் சமரச சட்டத்தின் பிரிவுகளை பொருள் விளக்கமும் கொடுத்துள்ளது நிலைநாட்டப்பட்ட சட்ட கோட்பாடுகளுக்கு உடன்படாததாக உள்ளது, மேலும் அவ்விதமான ஒரு பயிற்சியை தரப்பினர்களுக்கு அறிவிப்பு அனுப்பட்ட பிறகும், நீதிமன்றத்தின் முன்பாக நீதித்துறை கேள்வி முறைக்கு பிறகும் தான் செய்ய முடியும்.

7. முதன்மை சார்பு நீதிமன்றம் காஞ்சிபுரம் இசைவுத் தீர்ப்பு மற்றும் சமரச சட்டம் பிரிவு 5 வாதிக்கு எதிராக ஒரு தடையாக உள்ளது என்ற ஒரு கருத்தை ஏற்படுத்தியுள்ளது வழக்குரையை திருப்பியதற்கான காரணங்களில் இருந்து தெரிகிறது. மேலும், அவ்விதமான ஒரு காரணத்தை கொடுப்பதாக இருந்தாலும் தரப்பினர்களை கேட்டும் தீர்மானத்திற்கும் பிறகும் தான் செய்ய முடியும். எனவே, வழக்குரையை திருப்பிய காரணமானது நிலைநாட்டப்பட்ட கோட்பாடுகளுக்கு உடன்பட்டதாக இல்லை,

எனவே வழக்குகள், மற்ற வகையில் ஆவணங்கள் சரியாக இருந்தால் எண்ணிடப்பட வேண்டும், மேலும் நிலைக்கும் தன்மை அதிகார வரம்பு சம்மந்தப்பட்ட பிரச்சனைகள் திருந்த நீதிமன்றத்தில் எல்லா தரப்பினர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்டு அதன் பின் தான் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும்.

8. குறிப்பிட்ட நீதிமன்றங்கள் உரிமை ஒப்பந்தத்தின் உட்பிரிவு 13.8ஐ பின்பற்றி நீதிமன்றங்கள் வழக்குகளை ஏற்க அதிகாரம் வரம்பு இல்லை என்றும், அவை தடைப்பட்டுள்ளதாகவும் காரணம் காட்டி வழக்குரைகளை திருப்பியுள்ளன. தரப்பினர்களை கேட்ட பிறகுதான் அதிகார வரம்பு குறித்து இசைவு தீர்ப்பு உட்பிரிவை ஒரு கருத்துரையை ஏற்படுத்துவதற்காக பின்பற்ற முடியும். எனவே, நீதிமன்றம் முன்னதாகவே ஒரு கருத்துரையை உருவாக்க முடியாது, மேலும் ஒருதலை பட்சமான தீர்மானம் சட்ட கோட்பாடுகளுக்கு முரணானது மற்றும் அதிகார வரம்பு, நிலைக்கும் தன்மை, உள்ளிட்ட எல்லா காரணங்களையும் தரப்பினர்களுக்கு வாய்ப்பளித்த பிறகுதான் தீர்மானிக்கப்பட வேண்டும். உரிமையில் விசாரணை முறை தொகுப்பு பிரிவு 9ன் படி வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தடைப்பட்டிருப்பின் சில சூழ்நிலைகளில் நீதிமன்றம் வழக்குரையை திருப்பலாம் என்பதில் ஐயமில்லை. ஆனாலும் மேற்படி வெளிப்படையான அல்லது உட்கிடையான வகை இசைவு தீர்ப்பு உடன்படிக்கை, ஒப்பந்தம் போன்றவற்றின் அடிப்படையில் சில பிரச்சனைகளை தீர்மானிப்பதற்கு வழிகோலவில்லை. உடன்படிக்கையின் உட்பிரிவுகள் எல்லா தரப்பினர்களுக்கும் வாய்ப்பளிக்கப்பட்ட பிறகுதான் தீர்மானிக்கப்பட வேண்டும். எனவே, நீதிமன்றம் உரிமையியல் விசாரணை தொகுப்பு பிரிவு 9ன் படி வழக்கின்

நிலைக்கும் தன்மை குறித்த ஒரு வகைப்பாட்டை உருவாக்க வேண்டும். வெளிப்படையாகவோ அல்லது உட்கிடையாகவோ தடைப்பட்டிருந்தால் மட்டுமே வழக்குரைகள் திருப்பப்பட வேண்டு , மற்ற எல்லா வழக்குகளிலும் ஒரு தீர்மானம் தேவைப்படுகிறது.

9. மேற்படி சங்கதிகள் மற்றும் சூழ்நிலைகள் காரணமாக, கற்றறிந்த முதன்மை சார்பு நீதிபதி காஞ்சிபுரம் கடந்த 15.12.2022 தேதியில் ஓ.எஸ்.எஸ்.ஆர்.எண்.128404/2022ன் எண்ணிடாத ஓ.எஸ்.எண்...../2022 ல் பிறப்பித்த உத்தரவு மற்றும் கற்றறிந்த முதன்மை சார்பு நீதிபதி, திருத்தணி கடந்த 21.12.2022 தேதியில் ஓ.எஸ்.எஸ்.ஆர்.எண்.680/2022ன் எண்ணிடாத ஓ.எஸ்.எண்...../2023ல் பிறப்பித்த உத்தரவு ஆகியவை நீக்கரவு செய்யப்படுகின்றன, அதன் தொடர்ச்சியாக முதன்மை சார்பு நீதிமன்றம் காஞ்சிபுரம் மற்றும் முதன்மை சார்பு நீதிமன்றம் திருத்தணி ஆகியவை சீராய்வு மனுதாரர் தாக்கல் செய்த வழக்குகளை ஆவணங்கள் வேறு வகையில் சரியாக இருப்பின் எண்ணிடுவதற்கு உத்தரவிடப்படுகிறது. மேலும் எதிர்மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பி பிரச்சனைகள் குறித்து திறந்த நீதிமன்றத்தில் கேட்டு அதன் பிறகு சட்டத்திற்குட்பட்டு அதை முடிப்பதற்கு உத்தரவிடப்படுகிறது.

10. அவ்வகையில், இரண்டு சீராய்வு மனுக்களும் அனுமதிக்கப்படுகின்றன. தொடர்ச்சியாக சம்மந்தப்பட்ட பல்வகை மனுக்கள் முடிக்கப்படுகின்றன.

10.01.2023

பொறுப்புத்துறப்பு

"வட்டார மொழியில் மொழியாக்கம் செய்யப்பட்ட இத்தீர்ப்புரையானது, வழக்காடி, தன்னுடைய மொழியில் புரிந்துகொள்வதற்கு பயன்படுத்திக்கொள்வதற்கு உட்பட்டதேயன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும் பயன்படுத்திக்கொள்ளலாகாது. அனைத்து நடைமுறையான மற்றும் அலுவல்முறையான நோக்கங்களுக்கும் மற்றும் தீர்ப்புரையை நிறைவேற்றலுக்கும், செயற்படுத்தலுக்கும் அதன் ஆங்கிலப் பதிப்பே அதிகாரப்பூர்வமானதாகும். "